அனைத்து அரசு மற்றும் சமூக சேவைகளும் பின்வருவனவற்றை அவசியம் கடைப்பிடிக்கவேண்டும்:

- நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள் என்ற உணர்வை உங்களுக்கு ஏற்படுத்த வேண்டும்
- உங்களை மரியாதையுடன் நடத்த வேண்டும்
- மற்ற எல்லோரையும் போலவே உங்களையும் நடத்த வேண்டும்
- வெவ்வேறு கலாச்சாரங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்
- உங்கள் உரிமைகளைப் பற்றி நீங்கள் புரிந்துகொள்ள உதவ வேண்டும்.

சேவை வழங்குநரைப் பற்றி முறையீடு செய்ய நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்கள்.

## நியூ சவுத் வேல்ஸ் குறை தீர்ப்பாயம் (ஓம்புட்ஸ்மன்)

நியூ சவுத் வேல்ஸில் உள்ள அனைவருக்கும் உதவ நாங்கள் இங்கு உள்ளோம்.

அனைவரும் நியாயமாக நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.

எங்கள் சேவை இலவசமானது.

### எங்களைத் தொடர்பு கொள்ள

**அழைக்கவும் 02 9286 1000**

**கட்டணமில்லா அழைப்பு 1800 451 524**
சிட்னி பெருநகரப் பகுதிக்கு வெளியே – கைப்பேசிக்கான கட்டணங்கள் வசூலிக்கப்படலாம்.

**nswombo@ombo.nsw.gov.au**

தேசியத் தொடர் அஞ்சல் சேவை **133 677**

மொழி பெயர்த்துரைப்பாளர்
படிநிலை 1: **TIS** -ஐ **131 450** என்ற எண்ணில் அழைக்கவும்
படிநிலை 2: நியூ சவுத் வேல்ஸ் குறை தீர்ப்பாயத்திடம் பேசவேண்டுமெனச் கேட்கவும் - **9286 1000**

**www.ombo.nsw.gov.au**

ISBN: 978-1-925885-77-4

Tamil | தமிழ்

Ombudsman
New South Wales



# நியூ சவுத் வேல்ஸின் அரசு சேவையுடனோ அல்லது சமூக சேவையுடனோ உங்களுக்குப் பிரச்சினை ஏதும் உள்ளதா?

# நீங்கள் முறையீடு ஒன்றைச் செய்ய முயற்சித்திருக்கலாம். ஆனால் அது உதவவில்லை.



## நியூ சவுத் வேல்ஸ் குறை தீர்ப்பாயம் (ஓம்புட்ஸ்மன்) உங்களுக்கு உதவக்கூடும்.

**நாங்கள் உங்களுக்குப் பின்வரும் வகையில் உதவிபுரிய முடியும்:**

- சேவை வழங்குநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பதற்கு
- தொடர்பு கொள்ளச் சரியான நபரைக் கண்டறிவதற்கு
- உங்கள் முறையீட்டிலிருந்து நீங்கள் பெற விரும்பும் முடிவை வெளிப்படையாகத் தெரிவிப்பதற்கு.

**நாங்கள்:**

- சேவை வழங்குநருக்கு நீங்கள் எழுதிய கடிதங்கள் அல்லது சேவை வழங்குநர் உங்களுக்கு எழுதிய கடிதங்கள் போன்ற உங்களுக்குள்ள பிரச்சினை பற்றிய ஏதாவது ஆவணங்களைக் கொண்டுவரும்படி உங்களிடம் கேட்கலாம்
- உங்களோடு பிரச்சினை உள்ள சேவை வழங்குநரிடம் பேசலாம்
- உங்களுக்கு உதவிய மற்றவர்களுடன் பேசலாம்.

## நீங்கள் நியாயமில்லாத முறையில் நடத்தப்பட்டதாக நினைக்கிறீர்களா?

**நீங்கள் உதவி பெற முயற்சித்தீர்கள், ஆனால்:**

- பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை
- மேலும் தகவல்களைப் பெற முடியவில்லை
- உங்கள் உரிமைகளைப் பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை.

**ஊழியர்கள் உதவவில்லை, அல்லது அவர்கள்**

- முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். அத்துடன் உங்களை மதிக்கவில்லை
- உங்கள் மொழியில் தகவல்களை வைத்திருக்கவில்லை
- மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை வைத்திருக்கவில்லை.

உங்களைப் போலவே மற்றவர்களுக்கும் அதே பிரச்சினை இருக்கலாம். அனைவருக்கும் சேவைகளைச் சிறந்த முறையில் வழங்கிடச் சேவை வழங்குநர்களுடன் நாங்கள் இணைந்து பணியாற்றுகிறோம்.